தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪௪	திருவள்ளுவர் யாண்டு உ௰௲க சாதாரண, மார்கழி (1970 — திசம்பர் — 1971 சனவரி)	மலர் ௯

திராவிட மொழிகளில் எண் வேறுபாடு

டாக்டர் மோ. இசரயேல்,
மதுரைப் பல்கலைக் கழகம்.

எண் வேறுபாடு. திராவிட மொழிகளில் ஒருமை, பன்மை என இருவகை எண் வேறுபாடே உளது; இருமை (dual) எண் இல்லை.

கோதா, குடகு ஆகிய மொழிகளில் அஃறிணைப் பெயரில் எண் வேறுபாடு, இல்லை.

எ—டு. கோதா 'அத்' அது, அவை
குடகு 'அது' அது, அவை

மால்டோவிலும் தெளிவான எண் வேறுபாடு அஃறிணைப் பெயரில் அமையவில்லை.

தமிழில் அஃறிணைப் பெயரில் எண் வேறுபாடு குறிக்கக் 'கள்' விகுதி உளதாயினும் அது மிகச் சிறிதளவே பயன்படுத்தப்படுகிறது.

கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே (தொ. சொ. 169)
தெரிநிலை யுடைய அஃறிணை இயற்பெயர்
ஒருமையும் பன்மையும் வினையொடு வரனே
(தொ. சொ. 171)

என்னும் தொல்காப்பியச் சூத்திரங்களும்,

பால்பகா வஃறிணைப் பெயர்கள் பாற்பொதுமைய
(நன் 281)

என்னும் நன்னூற் சூத்திரமும்,

பறவை, குதிரை, ஆ, மரம் போன்ற அஃறிணைப் பெயர்கள் ஒருமையிலும் பன்மையிலும் யாதொரு வேறுபாடும் அமையாமல் வழங்கும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

வினையில் எண் வேறுபாடு. தோடா மொழியில் படர்க்கை வினையில் எண் வேறுபாடே இல்லை. ஒரே சொல்லே ஒருமையிலும் பன்மையிலும் வழங்குவதைக் காணலாம். கோதா, குடகு, குருக், மால்டோ ஆகிய மொழிகளில் அஃறிணையில் (ஆணல் பாலில்) ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை. தமிழ் மொழியின் பழங்காலச் 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைகளிலும். அஃறிணையில் தற்கால எதிர்கால வினைகளிலும் எண் வேறுபாடு அமையவில்லை.

	பழந் தமிழ்	தற்காலத் தமிழ்
எ—டு	அவன் வரும்	அது ஓடும்
	அவை வரும்	அவை ஓடும்
	அது வரும்	
	அவை வரும்	

மலையாள மொழியில் ஐம்பால் மூவிடங்களிலும் வினைகளில் எண் வேறுபாடற்ற இயல்பே காணப்படுவதும் இவண் கவனித்தற்குரியது.

அவன் வருந்நு	ஞான் வருந்நு
அவள் வருந்நு	ஞங்ஙள் வருந்நு
அவர் வருந்நு	நீ வருந்நு
அது வருந்நு	நிங்ஙள் வருந்நு
அவ வருந்நு	

அஃறிணை வினையில் எண் வேறுபாடற்ற இந்த இயல்பு தென் திராவிடக் குழு மொழிகளான கோதா, குடகு, தமிழ், மலையாளம் ஆகியவற்றிலும் வட திராவிட மொழிகளான குருக், மால்டோ ஆகியவற்றிலும் காணப்படுகின்றது. இத்தகைய இயல்பு நிலத்தொடர்பால் சாராத இரு - குழுக்களில் காணப்படுகின்றமையாலும், அஃறிணைப் பன்மைக்கு ஒரு குறிப்பிட்ட சொல்வேறுபாட்டு ஒட்டை (inflectional suffix) முந்தை வடிவமாகக் (proto - form) ஆகக் கொள்ளுதல் அருமையாக அமைவதாலும் அஃறிணை வினையில் எண் வேறுபாடற்ற இந்த இயல்பு முந்தை திராவிட மொழியில் (proto - Dravidian) அமைந்திருக்கலாம் எனக் கருத இடமுளது.

எ—டு. பன்மை விகுதிகள் பழந்தமிழ், துளு — அ;
கன்னடா, தெலுங்கு, கோலாமி, பர்ஜி —வ
கோண்டி —ங்க்

பழந்தமிழில் படர்க்கை நிகழ்கால வினைகளில், திணை, பால், எண் காட்டும் விகுதிகள் இல்லை. 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்களே நிகழ் காலத்தில் வழங்கின. பழந்தெலுங்கில் கூட இறந்தகால வினைகளில் எண், பால் வேறுபாடு காணப்படவில்லை.

எ - டு. வாடு } சேசுநு
அதி
அவி } சேயுநு

இவற்றினின்று முந்தை திராவிட மொழியில் அஃறிணை வினைகளில் எண் வேறுபாடு காட்டும் விகுதிகள் இல்லை என்று கருதுதல் இயலும். தமிழ் பழமையான வடிவத்தை எதிர் காலத்தில் மட்டும் நிலைபெறச் செய்து இறப்பு, நிகழ்வு ஆகிய இரு காலங்களிலும் திணை - பால், எண் காட்டும் விகுதிகளை கால இடை நிலைகளோடு இணைத்துள்ளது.

எ - டு.	இறப்பு	நிகழ்வு	எதிர்வு
அது	செய்தது	செய்கின்றது	செய்யும்
அவை	செய்தன	செய்கின்றன	செய்யும்

சிலர் தன்மை, முன்னிலை வினைகளில் காணப்படும் எண் வேறுபாட்டை ஒட்டி, ஒப்புமையாக்கத்தால் அஃறிணைப் படர்க்கையிலும் பிற்காலத்தில் எண் வேறுபாடு அமைந்தது எனக் கருதுகின்றனர்.

பன்மை விகுதிகள். திராவிட மொழிகளில் இருவகையான பன்மை விகுதிகள் உள்ளன 1. உயர்திணைப் பன்மை விகுதிகள். 2. அஃறிணைப் பன்மை விகுதிகள். உயர்திணைக்கும் அஃறிணைக்கும் வெவ்வேறு வகையான பன்மைச் சொற்கள் அமைந்திருக்கின்றன. வேறுபாடு மிகுதியும் விகுதியின் கண் காணப்படுகின்றது, எனவே அவற்றைப் பகுத்துக் காண்டல் மொழியின் உண்மை நிலையை அறிதற்குப் பயன்படும்.

உயர்திணைப் பன்மை. உயர்திணைப் பன்மையில் 'ஏ'கர வீறும், அதோடு அதன் முன்னிற்கும் ஒரு உயிரும் இணைந்து விகுதி

யாக அமைகின்றது. பெரும்பாலான திராவிட மொழிகளில் ரகர வீறுதான் உயர்திணைப் பன்மையை உணர்த்துகின்றது எனலாம்.[1] தோடா, கோதா, பிராகுய் ஆகிய மொழிகளில் 'ர'கரவீறு காணப்படவில்லை.

ரகரவீறு துளு, தெலுங்கு ஒழித்து ஏனைய நடுத் திராவிட மொழிகளில் ஆண்பால் பன்மையை மட்டும் உணர்த்துகின்றது. ஏனெனில் அவைகளில் பெண்பால் பன்மை அஃறிணைப் பன்மையுடன் இணைக்கப்பட்டுள்ளது. பழந்தெலுங்கில் —ரு விகுதி சில பெயர்களில் மட்டும் காணப்படுகிறது. எ—டு தேவரு, ராயரு (அரசர்கள்), நெய்யுரு (நண்பர்கள்), அல்லுரு (மருமக்கள்), பாலுரு (பையன்கள்) முதலியன. பழங் காலத்திலேயே —லு உயர்திணைப் பன்மை விகுதியாக இடம்பெற்றுவிட்டது. தற்காலத் தெலுங்கில் இடப்பெயர், எண்ணுப் பெயர் தவிர ஏனைய இடங்களில் எல்லாம் —லு விகுதியே உயர்திணையிலும் இடம்பெற்றுள்ளது. எ—டு. மீரு (நீங்கள்) வாரு (அவர்கள்), இருவுரு (இருவர்), முவ்வுரு (மூவர்).

கோண்டி மொழியில் —க் உயர்திணைப் பன்மை விகுதியாக வழங்குகின்றது. எ—டு. மர்—க் = மகன்கள் இத்தன்மை குயி, குவி மொழிகளிலும் காணப்படுகிறது. தமிழ் மொழியில் தொல்காப்பியனார் காலத்தில் அஃறிணைப் பன்மை விகுதியாகக் குறிக்கப்பட்ட 'கள்' விகுதி உயர்திணையிலும் காலப்போக்கில் பன்மை உணர்த்தும் விகுதியாக வழங்கலாயிற்று.[2]

எ-டு. மக்கள், கோக்கள், குழந்தைகள், தம்பிகள்.

இவ்வாறு அஃறிணைப் பன்மை விகுதி உயர்திணைப் பன்மை உணர்த்த பல திராவிட மொழிகளிலும் காலப்போக்கில் பயன்படுத்தப்படலாயிற்று. எ—டு தமிழில் கள்; தெலுங்கில் —லு; கோண்டி, குயி, குவி மொழிகளில் —க்.

தமிழில் 'கள்' விகுதி, உயர்திணை பன்மை விகுதி 'ர'கரத்துடன் இணைந்து இரட்டைப் பன்மை (double plural) விகுதியாகச் செயலாற்றுதலும் உண்டு.

எ—டு. அரசர்கள்
புலவர்கள்

தோடாவில் 'ஆம்' உயர்திணைப் பன்மையிலும் விகுதியாக அமைகின்றது. இதில் 'ம'கரம் பன்மையை உணர்த்துதல்

மூவிடப் பெயர்களில் உள்ள பன்மைக் குறிப்பீட்டின் (marker) ஒப்புமையாக்கத்தால் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதுதல் இயலும்.

அஃறிணைப் பன்மை. வட திராவிட மொழிகளிலும் தென் திராவிட மொழிகளிலும் அஃறிணையில் பன்மை காட்டும் விகுதி கட்டாயம் அமையவேண்டும்என்றில்லை. ஒரே சொல்லே அஃறிணை ஒருமை யிலும் பன்மையிலும் வழங்கலாம். ஒருமை, பன்மை வேறுபாடு பெயர்ச்சொல் பயனிலையாக ஏற்கும் வினைகளாலே அறியப்படும்.

எ–டு ஆ, குதிரை, பறவை, மரம் முதலியன
ஆ வந்தது ஆ வந்தன
பறவை பறந்தது பறவை பறந்தன.

நில இயல்புப்படித் தொடர்பற்ற இரு குழுக்களைச் சார்ந்த மொழிகளில் காணும் இவ்வியல்பே முந்தை திராவிடமொழி யின் இயல்பாக இருக்கலாம். ஆனால் நடுத் திராவிட மொழி களில் எல்லாம் ஆணல்பால் பெயர்களில் பன்மை விகுதி கட்டாயமானதே.

உயர்திணைப் பன்மைக்குரியது போல அஃறிணைப் பன்மை யில் ஒரே பொதுவான விகுதியை அமைத்துக் காண்டல் அரிது. திராவிட மொழிகளில் அஃறிணைப் பன்மை விகுதிகளாக பல் வேறுபட்ட வடிவங்கள அமைகின்றன. —கள், —ள், —லு, —க், —க, ங்க், —ங, —ஸ்க், —சில், —வ், —ஆக், —துலு, —தில், —அ ஆகியவை வெவ்வேறு மொழிகளில் காணப்படும் பன்மை விகுதிகள்.

—கள் இவ்விகுதி தென் திராவிட மொழிகளிலும், கோலாமி-பர்ஜி துணைக்குழு மொழிகளிலும் காணப்படுகின்றது.

தமிழ் மரங்கள்
பர்ஜி கில்குல் (கிளிகள்) —கள் > —குல்

இவ்விகுதி இரண்டு குழுவைச் சார்ந்த மொழிகளில் அடை வதாலும், பழந் தமிழில் வழங்குவதாலும், தொல்காப்பியனார் இது பற்றிக் கூறி, இதற்கு இலக்கணம் வகுக்கின்றனமையாலும் (தொ. சொ. 169) இது திராவிட மொழிகளில் பன்மை விகுதி யின் முந்தை வடிவமாக இருக்கலாம்.

தெலுங்கு மொழியில் பெரும்பாலான சொற்களில் —லு வடிவமே பன்மை விகுதியாக அமைகின்றது. எனினும் சில

சொற்களில் பழமையான —கள் (> கலு) வடிவம் அமைந்திருந்தும் அச் சொற்கள் தவருகப் பகுக்கப்பட்டுச் சொல் வடிவம் வேறுபட்டு வழங்குவதையும் காணலாம்.

எ—டு.	பன்மைச் சொற்கள்	ஒருமை
	சிலுகலு (கிளிகள்)	சிலுக
	எலுகலு (எலிகள்)	எலுக
	நக்கலு (நரிகள்)	நக்க

—ள் (<ல்/லு) தெலுங்கு, துளு ஆகியவற்றிலும் கோலாமி-பர்ஜி துணைக்குழு மொழிகளிலும் காணப்படுகின்றது. இது —கள் விகுதியின் சிதைந்த வடிவேயாகும்.

—க இவ்விகுதி அல்லது இதன் மாற்றுருபுகளான —க், —ங்க் —ங, —ஆக் ஆகியவை நடுத் திராவிட மொழிகளின் கோண்டி — குயி துணைக்குழுவிலும் வட திராவிட மொழியான பிராகுயிலும் காணப்படுகின்றது. இரு குழு மொழிகளில் இவ் விகுதி காணப்படுவதால் இது சிறிது முந்திய நிலையில் மொழியில் இடம் பெற்றதாக இருக்கலாம்.

சில சிறப்பு விகுதிகள். கோண்டி — குயி குழு மொழிகளில் —ஸ்க், கோலாமி - பர்ஜி குழு மொழிகளில் - சில் ஆகியவை பெண் பால் பன்மை உணர்த்துவனவாக உள்ளன.

கோண்டி ஸேலா - ஸ்க் பர்ஜி சால - சில் (சகோதரிகள்)
கோண்டி கோரியா - ஸ்க் பர்ஜி கொரெு - சில் (மருமகள்கள்)

கோலாமி - பர்ஜி மொழிகளில் பெண்பால் உறவின் முறைப் பெயர் விகுதியாக —வ் அமைகின்றது. இது பழந்தமிழில் பன்மைச்சுட்டுப் பெயரில் அமைந்த வகரத்தை ஒத்ததோவென்று ஆயுந் தன்மையது.

எ — கு. அவ், இவ், உவ்.

தமிழில் - அ பன்மைப் பெயர் விகுதியாக வழங்குதல் உண்டு. [3]

எ — டு. பல, சில.

தோடா மொழியில் —ஆம் பன்மை உணர்த்துகின்றது.

எ—டு. ஆத் — ஆம் இந்தப் பொருள்கள் / இந்த ஆட்கள்.

தெலுங்கிலும், பர்ஜி - ஒல்லாரி துணைக்குழுவிலும் தனி வகையான ஒரு பன்மை விகுதி காணப்படுகிறது. - துலு / - தில்

எ — டு.	சேயி	சே - துலு	தெலுங்கு
	நாயி	நா - துலு	
	வார்	வார் - தில்	
	கணீர்	கணீர் - தில்	

—துலு விகுதி தெலுங்கில் —யி இறுதிபெறும் சொல்லோடு மட்டும் இணைகின்றது.

அஃறிணை பன்மையில் பொதுவான எல்லாப் பன்மை விகுதிகளுக்கும் -ககரம் பொதுவாக அமைந்துள்ளது கவனித்தற்குரியது.

அடிக் குறிப்புக்கள்

1. அர் ஆர் பஎன வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே
(தொ. சொ. 206)
மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
காலக் களவியொடு முடியும் என்ப (தொ. சொ. 207)

2. கிளந்த கிளைமுத லுற்றரவ் வீற்றவும்
கள்ளெ னீற்றி னேற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும் (நன்னூல் 278)

3. முன்ன ரவ்வொடு வருவை யவ்வும்
சுட்டிறு வவ்வும் கள்ளிறு மொழியும்
ஒன்ற லெண்ணு முள்ள வில்ல
பல்ல சில்ல வுளஇல பலசில
இன்னவும் பலவின் பெயரா கும்மே (நன்னூல் 280)

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சங்கமனம் மதித்த பூத்தலைமகளிர்

திரு. இர. குழந்தைவேலு, எம். ஏ., கோவை.

6

இனி, மகளிர் பூச்சூடும் முறைமைக் காட்சிக் கூறுகளில், திருமணத்தின் முன்னையது பின்னையது என்னும் இரண்டன் வழி நிறுத்திக் கூறலாகும் பொருத்தங்களைக் கண்டறியலாம்-

தலைமகனோடு உடன்போக்கு நடையிட்டது, தலைமகளுக்கு நன்மண நுகர்ச்சியினும் இனிதாயிற்று. நெடுங்கானத்தில் நின்ற மராமரத்தின் குறுங்கிளையினைப் பற்றி வளைத்துக் கொடுத்தான் தலைமகன். அம் மரத்தில், தலைமகள் கொய்து தொகுத்த மலர்களைத் தேர்ந்தெடுத்துத் தன் விளையாட்டுப் பாவைக்கும் தனக்கும் இரண்டு கூறுகப் பிரித்தாள். அச் செயலைக் கண்ட காதலன் உவப்புற்றான் அப்பகுதி,

" நெடுங்கான் மராஅத்துக் குறுஞ்சினைபற்றி
வலஞ்சுரி வாலிணர் கொய்தற்கு நின்ற
மள்ள னுள்ள மகிழ்கூர்ந் தன்றே
பஞ்சாய்ப் பாவைக்குப் தனக்கும்
அஞ்சாய் கூந்த லாய்வது கண்டே " [28]

என்பது. இங்கு, 'பஞ்சாய்ப் பாவைக்கும் தனக்கும்' என்னும் தொடரைச் சூழ்ந்த வினைத்திறத்தைக்கொண்டு. தலைமகள் விளையாட்டுப் பருவமுதல் பூச்சூடலை மேற்கொண்டவள் என்ற குறிப்புப் பொருள் அறியப்படும்.

நன்மனையில் வதுவை நிகழவே, தலைவியின் பின்னலுற்ற கூந்தலில் தலைவன் பூவணிந்தான். இவ்வுரிமைச் செயலைக் கண்டுகளித்த தோழி,

" நாட.
இனிதுசெய் தனையால்; நுந்தை வாழியர்
நும்மனை வதுவை அயரவிவள்
பின்னிருங் கூந்தல் மலரணிந் தோயே " [29]

---

28. ஐங். 383 : 2-6. 29. ஐங். 294 : 2-5.

என்று கூறினாள். இங்குத் தலைவனை விளித்து, "இனிது செய்தனையால்" என்றும், "வதுவை அயர" என்றும் தோழி மொழிந்த மொழிகளில், 'முன்னைக் களவு நாளில், இவ்வாறு வதுவை செய்யப் பூவணிந்தாய்; அன்று பூச்சூட்டிய உறவு நலம் இப்பொழுதும் இணைந்து நிலைக்கச் செய்த செயல், இருவர்க்கும் இனிதாயிற்று' என்னும் சிறப்பில் களவு, கற்பு ஆகிய இருநிலைகளிலும் மலரணிதல் பெற்ற வாழ்வைக் கற்று மகிழ்தல் இயலும் அடுத்து, அம்மலரணிதலால், இக்காதலர் இருவர்தம் விடுதலறியா விருப்பமும், களவில் நெஞ்சங் கவர்ந்து பழகிய தலைவனே தலைவிக்குக் கொழுநனாக வாய்த்த தமிழ்க் கற்புவழியின் விழுப்பமும் வெளிப்பட்டு வலியுறுதல் காணலாம்.

இப்பாடல்[30] கருத்தைத் துணையாக வைத்துக்கொண்டு

"கூந்தலைப் பின்னி மலரணிந்தான் என்று கூருமல், பின்னிய கூந்தலில்
மலரணிந்தான் என்று கூறுவதால், பின்னிய நிலை குமரிக்கோலம் என்றும்.
மலரணிகை கற்புக்கோலம் என்றும் தெளிவாதால் காண்க"[31]

என்று டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இவ்வாறு கருதியவர்தம் கூற்றையும், பழந்தமிழறிஞர் ஒருவர் தம் கருத்தையும் உடன் நிறுத்தி ஆராய்வது அழகு. செவிலியின் மனத்தை அறிந்து, தலைவியின் வாழ்க்கை நலத்திற்கு இனியவை கூறலில் ஈடுபட்டவள் குறிஞ்சிப்பாட்டின் தோழி. அவள் இசைத்த நிகழ்ச்சி நிரலில், அத்தோழியர் கண்ணெதிரே ஆண்மையழகன் தோன்றுதற்கு முன்னர், இருவர் கூந்தல் அழகையும், பூச்சூடிய செயலையும்,

"பின்னிருங் கூந்தல் பிழிவனந் துவரி"[32]
"பல்வே றுருவின் வனப்பமை கோதையென்
மெல்லிரு முச்சிக் கவின்பெறக் கட்டி"[33]

என்ற குறிஞ்சிப் பாட்டடிகளில் விளங்கிக்கொள்ளலாம். இப்பூச்சூட்டு நிகழ்ச்சி, கன்னியர் இருவரும் நீராடிய பின்னரே அமைந்தது. இங்ஙனம், முன்னைத் தமிழகத்தில் மணங்காணாத இளமகளிர், தம் பின்னுதலுற்ற கூந்தலில் கோதையினைச் சுற்றினர் என்னும் கபிலர் கண்ட காட்சியோடு, 'தமிழ்க் காதல்'

---

30. ஐங். 294
31. 'தமிழ்க் காதல்' பக். 164
32. குறி. 60-
33. குறி. 103-104

என்னும் ஆய்வு நூலில் நிறுவப் பெற்ற மேலைக்கொள்கை முரணியது என்பது தெளிவாகும்

களவுநாள் இரவில் தலைவனொடு ஒத்துக் கலந்து பழகினள் தலைவி, தலைவனொடு மகிழ்ந்து தலைவி சூடிய பலவகை மலர்களைப் புலரும் வைகறையில் கூந்தலிலிருந்து உதிர்த்தாள்; மலர்ச் சாந்தைக் கூட்டிக் கோதினள்; எண்ணெய் பூசினள்; தன் சுற்றத்தாருடன் ஒன்றுபட்டவளாக விளங்கினள்; தலைவனொடு இரவில் பழகிய நெருக்கத்தை, வீட்டுச் சூழலுக்கேற்பக் காட்டிக் கொள்ளாது, அவனுக்கு வேறுபட்ட முகத்தையுடையவளாகினள். இவ்வண்ணம், வரைவுடைமையை முன்வைத்து நினைவுகூர்ந்து, அவள் இருவகை நடப்புக்களையும் சுவைத்து, "இரண்டறி கள்வி நம் காதலோளே"[34] என்று பாராட்டித் தன் நெஞ்சம் வேட்பத் தலைவன் கூறிய மற்றை விளக்கத்தை,

"நள்ளென் கங்குல் நம்மோ ரன்னள்;
கூந்தல் வேய்ந்த விரவுமலர் உதிர்த்துச்
சாந்துளர் நறுங்கதுப் பெண்ணெய் நீவி
அமரா முகத்த ளாகித்
தமரோ ரன்னள் வைகறை யானே"[35]

என்றவிடத்துக் காணலாம் இங்கு,

"அன்போடு சூடிய பூவை அச்சத்தோடு நினைந்து
உதிர்த்தாள் எனின்,
குமரியர் பூவணிதல் சமுதாய வழக்கிற்கு ஒவ்வாக்
காட்சி என்பது தெளிவு"[36]

என்று டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் எடுத்துக்கூறும் கருத்துப்பொருள் உன்னி உணரத்தக்கது. மேலைக் குறுந்தொகைப் பாடலில், தலைவி 'அச்சத்தோடு நினைந்து' மலர் உதிர்த்தலைக் குறிக்கும் சொற்றொடர் பெய்யப் பெறவில்லை என்பது அறியக் கிடக்கின்ற செய்தி. இத்தலைவி, நாளும் வைகறையில் இயல்பாக, வாடிய பூவைக் கழித்தல், சாந்து ஊட்டுதல், எண்ணெய் தடவுதல் ஆகிய கூந்தல் புனையும் செயல்களை நிறைவேற்றினள் என்பதாகவே அறிதற்கு இடம் உண்டு முடிப்பார் முடிந்து உலர்ந்த பூவைக் களைதல், புது மலரணிதல் ஆகிய இயல்புகள், "சூடின ரிட்ட பூ"[37] என்றும், "புதுமலர் கஞல"[38] என்றும் எட்டுத்தொகை நூல்களில் உரைக்கப் பட்டுள்ளன.

34. குறு. 312: 1.
35. குறு. 312: 4-8
36. 'தமிழ்க் காதல்': பக்கம். 160
37. கலி. 23: 13.
38. புற. 147: 8

இவ்வகை நோக்கால், தலைவி, வைகறையில் இல்லத்தினர் எண்ணத்திற்கு, நடக்கும் நடப்பால் வேறுபாடு காட்டாது இயல்பாகக் காய்ந்த பூவை அகற்றினள் என்னும் பொருந்திய கருத்தை ஏற்றுக்கொண்டால், இங்கு வலுத்த 'சமுதாய வழக்கிற்கு ஒவ்வாக் காட்சி' என்ற எண்ணத்தை மாற்றிப் பாட்டின்பம் துய்த்தற்கியலும்.

அடுத்து, இல்லறத் தலைவிக்குத் தலைமகன் பூச்சூட்டிய குறிப்பையும் சங்க இலக்கியத்தகத்துக் கற்கலாம்.[39]

7

மகளிர் பூச்சூடும் வழக்கில் எழுந்து திரண்ட பலதிறக் கருத்துக்கள் மதிப்பிடப் பெற்று அறுதியிடப் பெற்றன. இத்திற ஆய்வில், சங்கப் பாக்கள் அறிவுறுத்தும் சில செய்திகள், கன்னியர் பூச்சூடும் முறைமைக்கு முரணியவை போலக் காணப்படும். அவ்வெண்ணங்களை ஊன்றி ஆராய்ந்து, அவற்றின் நேரிய செம்மை அறிந்து அணைப்பது இங்குப் பொருந்துவதாகும்.

மேலே அளந்தறிந்தவற்றால், பழந் தமிழகத்தில் இளஞ் செல்வி, இல்லறக்கிழத்தி என்னும் இருநிலைப் பெண்ணல்லார்க்கும் பூச்சூடுதல் பொதுப் பண்பாயிற்று என்பது ஏற்படும். அங்ஙனமே, பரத்தை ஒருத்தி ஆம்பல் மலரைக் கூந்தலில் செருகிச் சூடி அழகு செய்துகொண்டு, வெள்ளம் பெருகிய நீர்த் துறையில் விளையாடுதற்கு விருப்புற்றுப் புறப்பட்ட செய்தியினை,

"கூந்த லாம்பல் முழுநெறி யடைச்சிப்
பெரும்புனல் வந்த விருந்துறை விரும்பி
யாமஃ தயர்கஞ் சேறும்"[40]

என்னும் அப்பரத்தை கூற்று அறிவுறுத்தவே, அந்நாளைய பரத்தையர் மலரணிந்த குறிப்பு புலப்படும்.

இனி, மணங்கொள்ளுதற்கு முன்னர் இள மகளிர்க்குக் கூந்தலில் களவுக் காதலன் கண்ணியைச் சூட்டுதலையும், அக்காதலன் சூடிவந்த மாலையைச் செல்வியர் தம் முடியில் முடித்தலையும் சங்கமனத்து அன்னையர் போற்றிக்கொள்ளவில்லை என்னும் குறிப்பிடத்தக்க ஒன்று மதிப்பிடுதற்குரியது. சங்க நாளில் பரவிய இக்கருத்துக்கள்,

---

39. அக. 389

40. குறு. 80; 1-3.

(அ) "தண்கயத் தமன்ற ஒண்பூங் குவளை
அரும்பலைத் தியற்றிய சுரும்பார் கண்ணி
பின்னுப்புறந் வாழக் கொன்னே சூட்டி
நல்வரல் இளமுலை நோக்கி நெடிது நினைந்து
நில்லாது பெயர்ந்தனன் ஒருவன் அதற்கே...
படப்பை நின்ற முடந்தாட் புன்னைப்
பொன்னேர் நுண்தாது நோக்கி
என்னும் நோக்குமிவ் வழுங்கல் ஊரே" 41

(ஆ) "புல்லினத் தாய மகன்சூடி வந்ததோர்
முல்லை யொருகாழும் கண்ணியும் மெல்லியால்
கூந்தலுட் பெய்து முடித்தேன்மன் தோழியாய்
வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போடே
அன்னையும் அத்தனும் இல்லரா யாய்நாண
அன்னைமுன் வீழ்ந்தன்றப் பூ;
அதனை, வினவலுஞ் செய்யாள் சினவலுஞ் செய்யாள்
நெருப்புக்கை தொட்டவர் போல விதிர்த்திட்டு
நீங்கிப் புறங்கடைப் போயினாள்" 42

(இ) "பெய்போதறியாத்தன் கூழையுள் ஏதிலான்
கைபுனை கண்ணி முடித்தாளென் றியாய்கேட்பின்
செய்வதி லாகுமோ மற்று 43

என்னும் சில பாக்களின் பகுதிகளில் பதிந்திருத்தலை உணரலாம்.

இங்கு, ஆய்வுப் பொருளாகக்கொண்டு வரம்பு செய்து காட்டிய கருத்துக்களை அடியொற்றி, மேலை முப்பாடற் பகுதிகளில் அகத்தும் புறத்தும் அடங்கிய உயிர்க் கூறுகளின் உண்மைப் பொருளை, அந்நிரலில் நிறுத்தி விளக்கம் காண்டல் வேண்டும்.

(அ) களவுக் காதலன் பின்னுற்ற கூந்தலைத் தொட்டான்; அக் கூந்தலில், அவள் விரும்பாதிருக்க வீணே குவளைக் கண்ணியைச் சூட்டினான்; தலைவியின் நல்லிளமை பொங்கிய நெஞ்சின் வளரும் அழகிற்குத் தன் நோக்கைக் கொள்ளை கொடுத்தான்: ஏதோ நீள நினைந்து நில்லாது நடந்தான்.

---

42. கலி. 115: 4-12. 41. அக. 180; 5-9; 13-15.
43. கலி. 107: 15-17.

இங்குத் தொடர்ந்து நடந்த இத்துணை நிகழ்ச்சிகளையும் தொகையாகக் கண்ட பின்னரே, அவள் மேனியில் பூத்த பொன்னிறப் பசலையை ஊர் உற்று நோக்கிற்று என்பதே அக நானூற்றுப் பாடல் காட்டும் செவ்விய நிலை. [44] அந்நிகழ்ச்சிக் கோவையில், கூந்தல் கொண்ட மலரும் ஒன்றாக அடங்கும்; அவ்வளவே, இங்கு எண்ணத்தக்கது.

குறிஞ்சிப் பாட்டுக் கன்னியர் மலரணிந்த [45] நலத்தைச் செவியுற்ற செவிலி, ஆறி அடங்கிய சாயலோடு விளங்கினாள். கலித்தொகைக் கன்னி ஒருத்தி, பூச்சூடிப் புறத்தே நடையிட்டாள். [46] அங்கு, அவ்விளமகள் மலர் முடித்த பொலிவைக் கண்ட மக்கள் சீற்றங்கொண்ட குறிப்பில்லை. இக்கூறுகளின் தெளிவால், கன்னி கூந்தலில் முடித்த மலரின் அடியாகவே, குடிமக்கள் கண்ணின் ஒளிப்பார்வை மாற்றங்கண்டது என்ற எண்ணம் நீங்கும். [47]

(ஆ) இப்பகுதியால் எழும், 'தலைவிக்கு அச்சம் ஏன் ?' [48] என்ற ஐயம்,

"தலைவி களவு வெளிப்பட்டதென்று அஞ்சித் தோழிக்குச் சொல்ல
நமர் நின்னை அவற்கே கொடுக்கச் சூழ்ந்தாரெனச்
சொலலி அச்சம் நீக்கியது" [49]

என்னும் துறையாலும், முன்னைய பின்னைய பாடலடிகளாலும் விளக்கமுறவே விலகுவது உறுதி.

தலைவியின் மனத்தகத்தே நின்றான் ஆயமகன், அவன் சூடி வந்ததொரு முல்லைத் தொடையினையும், அதனுற் செய்ததொரு கண்ணியையும் தன் 'கூந்தலுட் பெய்து' முடித்தாள் தலைவி. இக்கரந்த செயல், பிறர்காணாது கடுங்கள் பருகிய செயலை ஒக்கும்.

செவிலித்தாய், மகள் கூந்தலை விரித்து வெண்ணெய் ஊட்டவே, ஆயமகன் சூடி வந்த பூ— "அப்பூ" [50] — அத்தாய் முன் வீழ்ந்தது. இங்கு, "அப்பூ" என்ற குறிப்பு இன்றியமையாதது. தலைவியின் களவொழுக்கம் வெளிப்பட்டது, பருகிய கள்ளின் களிப்பு, வாய்ச்சொல்லால் வீறுகொண்டு வெளியிடு கண்டதைக் கடுத்தது எனலாம். இந்நிலையில், களவொழுக்

44. அக. 188.
45. குறி. 103—104.
46. கலி. 56.
47. 'தமிழ்க்காதல்'; பக். 158.
48. 'தமிழ்க்காதல்'; பக். 159.
49. கலி. 115.
50. கலி 115 : 0

கத்து மகளைக் குறித்து, "அலர் வாய்ப்பெண்டிர் இன்னா இன்னுரை"[51] கேட்டிருந்த அன்னைக்கு ஐயம் தெளிவுற்று அடங்கிற்று. ஐயம் அறவே, அன்னை "வினவலும்"[52] செய்தாளில்லை. எனினும், அன்னை "நெருப்புக்கை தொட்டவர் போல விதிர்த்திட்டு, நீங்கிப் புறங்கடைப் போயினள்"[53] அச் செயல் ஏன் வேண்டும்? நெருப்பை அறிந்தே தொடினும், அறியாதே தீண்டினும் கையைச் சுடும். இங்குத் தாய் "கவைமக நஞ்சுண்டாஅங்கு அஞ்சும்"[54] துயரம்போல, இளமகள் செய்த கரந்த செயல், அன்னை நெஞ்சத்திற்கு வெம்மையூட்டிற்று என்பது புலனாகும்.

நற்றாயரும் செவிலியரும் நாடறிநன்மணம் நிகழும் நாள் கூடி வாய்க்குளவும், செல்வியர்க்குப் பொய்ம்மையாளர் சிலரால், கற்பின் வழிநிலை பிழையுற்று விடுதலாகாது என்ற எண்ணம் குடிகொண்ட மனத்தினராவர் காதலர் இருவருக்கும் "ஆய்ந்த மன்றல்"[55] மலர்ந்து, "இனிது செய்தனையால்"[56] என்று மணக்கப்பெற்று, ஒன்றினர் என்னும் வாழ்க்கை வாழ்க்கை. அடுத்து, அன்னையர், நாட்டில் அறநெறி நில்லாக் காளையர் சிலர் காதலித்துக் கைவிடுத்த கன்னியர் நிலையினையும் நினைவு கூர்ந்திருத்தல் கூடும் என்றும் கொள்ளலாம்.

இங்கு, எடுத்துக் காட்டத்தக்க சான்றுகள் சில:
தலைவி ஒருத்தி,

"யாரு மில்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ"[57]

என்று தான் கூடியதைத் துணைகொண்டு, தலைவனைக் குறித்துத் தன் நெஞ்சில் எழுந்த எண்ணத்தை இயம்பினள்.

தரங்கெட்ட ஒருவன், இளையாள் ஒருத்தியின் நலத்தைத் துய்த்துக் கைவிடுத்தான்; அவளை அறியேனென்றும் உரைத்தான். அவன் மெய் கூறாது, பொய் கூறியது சான்று வாயிலாக வெளிப்பட்டது. அவன் மரக்கிளையில் சேரப் பிணிக்கப் பெற்றான்; சொரியப் பெற்ற நீற்றினைத் தலையாலே தாங்கினான். ஊரவையின் ஒறுத்தலை ஏற்று நின்ற அவன் கீழ்மை,

---

51. நற். 143 : 7—8.
52. கலி. 115 : 10.
53. கலி. 115 : 11—12
54. குறு. 325.
55. குறி. 21
56. ஐங். 294 : 3.
57. குறு. 25 : 1—2.

"திருநுதற் குறுமகள் அணிநலம் வவ்விய
அறனி லாளன் அறியேன் என்ற
திறனில் வெஞ்சூள்" [58]

என்னும் அகநானூற்றடிகளால் விளங்கும்.

இவ்வகை நிலைகளையெல்லாம் எண்ணியதோடு, கற்புநிறை எண்ணம் நிலைத்த பொறுப்புமிக்க நினைப்பில் அன்னை ஆழ்ந்தாள்; மகள் மன்பதை போற்றும் கற்புவழியில் வாழச் சூழ்ந்தாள். எனவே, அன்னை "சினவலும் செய்யாள்" [59] என்னும் ஆறிய மனநிலை வாய்க்கப்பெற்றாள், மேல் விரித்த விளக்கத்தானும்,

"அஞ்சல், அவன்கண்ணி நீபுனைந்தா யாயின் நமரும்
அவன்கண் அடைசூழ்ந்தார் நின்னை அகன்கண்
வரைப்பின் மணல்தாழப் பெய்து திரைப்பில்
வதுவையும் ஈங்கே அயர்ப அதுவேயாம்
அல்கலுஞ் சூழ்ந்த வினை" [60]

என்ற தோழியின் சீர்வாய்ந்த கூற்றானும், இங்குத் தோற்றங் கண்ட ஐயம் அறுபடுதல் வெளிப்படை.

(இ) தொழுவிலே ஆயமகன் ஏற்றைத் தழுவினான் அவன் சென்னியிலிருந்த வனைந்த கண்ணி ஏற்றின் கொம்பில் சிக்கிற்று அக்காளை துள்ளிற்று: அப்பூ விடுபட்டு, ஆயமகள் கூந்தலிடத்து விழுந்தது; தவறிக் காணாத ஒன்று மீண்டும் கைக்குக் கிட்டியது போலப் போற்றிக்கொண்டு தன் தலையில் முடித்தாள் அவள்; 'அயலான் கைபுனைந்த கண்ணியினைக் கூந்தலில் சூடியது ஏன்?' என்று தாய்கேட்டல் கூடும் என்னும் ஓர் எண்ணம் அவளை அலைத்தது. எனவே, அவள், தோழிக்கு மொழிந்து ஆறுதல் பெறத் துடித்தாள்.

இத்தலைவியை வைத்து நிகழ்ந்த தவறுகளில், ஒன்று ஆயமகன் தலையில் சூடியிருந்தது அப்பூ. மற்றொன்று, அன்னைக்கு அயலான் பூ அது. ஆதலான் வெறுத்து ஒதுக்குதற்குரியது அது. இன்னொன்று, அவன் தன் கைகொண்டு புனைந்தது அது. வேறொன்று, அதனை விருப்புற்றுத் தலைவி தன்தலைக்கு முடித்தது. இத்துணைக் குற்றப்பாட்டினும், அப்பூ விடுபட்டுத் தலைவியின் தலையில் விழுந்ததே பெருந்தவறு அனைத்துத் தவறுகளையும், தந்தையோடு ஐயன்மாரெல்லாம் ஒருங்கு கலந்து, களவொழுக்

58 அக. 256; 16-18.
59. கலி. 115; 10
60. கலி. 115; 17-21

கத்துப் பொதுவனுக்குத் தலைவியைக் கொடுத்து மணமுடித் தற்குச் சூழ்ந்த செய்தியினையும் செவ்விதின் அறிந்தவள் தோழி, எனவே, கலங்கிய தலைவிக்கு,

"எல்லாத் தவறும் அறும்" [61]

என்று உள்ள உவகையால் உயர்தற்குக் குறுகக் கூறினாள் தோழி. இத்தோழியின் தேறுதல் கூற்று, இப்பாடலில் எழும் அனைத்துச் சிக்கலும் கழிதற்கு வழிவகுப்பது.

இப்பாடலின்,, "பெய்போ தறியாத்தன் கூழை" [62] என்ற தொடருக்கு,

"முடிக்கும் பூ இது வென்றறியாத தன்னுடைய மயிர் என்றும்"

"மயிருக்கு மணந்தரும் பூ முடித்தல் வேண்டுமென்றறியா தவள்" என்றும், நக்சினார்க்கினியரும், [63]

இவ்வுரையைக் [64] காட்டிலும் 'போது பெய்தலை (சூடுதலை) அறியாத'

என்று உரைப்பதுவே பொருந்தும்"

என்றும்,

"உரை எதுவாயினும் குமரிக்கொண்டை பூமணம் அறியாதது

என்பதுவே பொருள்" [65]

என்றும் டாக்டர் வ. சுப மாணிக்கம் அவர்களும் உரையும் விளக்கமும் வரையலாயினர். எனினும், இப்பொருளை அச் சொற்கள் உணர்த்தவில்லை. இம் முன்னணி உரைவிளக்கங்கள் என் விளக்கத்திற்கு வழிகாட்டின.

இவ்வாராய்ச்சியைக் குறித்துக் கூறிட்டுக் கண்டனவற்றை யெல்லாம், ஈண்டுக் கருத்தில் ஒரு சேரக்கொண்டேன். இப் பாடலில் பெய்யப்பெற்ற "அப்பூ" [66] என்னும் சொற்றொடரை யும், ஏதிலான் சென்னியிலிருந்து விடுபட்டுத் தலைவியின் தலையில் ஏறி நிலைத்தலைக்கண்டது என்னும் கருத்தினையும் ஆழ்ந்து நோக்கினேன். அத்தெளிவில் தலைவியின் முன்னைய பின்னைய எண்ணத்தொடர்புக்குப் பொருந்தியது, 'அயலான் கையால் புனையப்பெற்றுச் சூடி விடுபட்ட அப்பூச்சூடுதலை அறியாத கூந்தல். என்னும் பொருளே என்று கண்டேன்.

61. கலி. 107 : 18 62. கலி. 107 : 15
63. கலி. 107 : 15-உரை. 64. கலி. 107 15-உரை.
65 'தமிழ்க்காதல்' பக். 162 66. கலி. 107 : 8

இங்குச் சங்கமனத்து அன்னையர், தம் இளஞ்செல்வியர், "பெண்துணை சான்றனள்[67] என்னும் பருவமுற்ற நிலையினைத் தொடர்ந்து, ஏதிலான் வழியாகப் பூவணிதலை ஏற்கத் தயங்கித் தள்ளினர் என்பது உறுதியாகின்றது

8

முந்தை வாழ்க்கை வழியில். மகளிர் மலரணிதலைக் குறித்து மேற்கொண்ட ஆய்விலிருந்து தெளிந்த மதிப்புக்கூறுகளைத் தொகுத்துக்காணலாம்.

(அ) இளங்கன்னி, இல்லறக்கிழத்தி என்னும் இருநிலை வாழ்க்கையினரும் மலரணிந்தனர்,

(ஆ) மகளிர் மனத்தை நடுக்கம் விளைத்த சூழலில் பூச்சூடிப் பொலிதலை விலக்கினர்.

(இ) மணங்கொள்ளாத மங்கையர் தம் கூந்தலில், களவுக் காதலர் வாயிலாக மலரேறுதலை அன்னையர்நெஞ்சம் அணைத்துக் கொள்ளவில்லை.

இறுதியாகக் களவிலும் கற்பிலும் பெண்பாலர்க்குரிய மரபுகளை,

"முந்நீர் வழக்கம் மகடூஉவொடு இல்லை" [68]

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மை யான" [69]

"தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்
எண்ணுங்காலைக் கிழத்திக் கில்லை" [70]

"களஞ்சுட்டுக் கிளவி கிழவிய தாகும்
தான்செலற் குரியவழியாக லான" [71]

"எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரார்" [72]

என்றவாறு தம் நூற்பாக்களில் வரைந்த தொல்காப்பியனார்' மலரணிதல் மணவாத மகளிர்க்கு ஒவ்வாதது என்ற செய்தியினைக் கூறினாரிலர். பூச்சூடும் வழக்கு மணங்காணாத இளமகளிர்க்குத் தகாததாயின், தொல்காப்பியனார் அதனை வெளிப்படக்கூறித் தமிழகத்து முறைமையினைப் பேணியிருத்தல் ஒருதலை என்பது விளங்கும்.

---

67. அக 315 : 3.
68 தொல் பொருள் அகத். 34 (நச்சி)
69 தொல் பொருள் அகத். 35 (நச்சி)
70 தொல். பொருள். களவு. 27 (நச்சி)
71. தொல். பொருள் களவு. 120 (நச்சி)
72. தொல். பொருள். கற்பு. 34 (நச்சி)

தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும்

திரு. சா. குருமூர்த்தி, எம். ஏ., எம். லிட்.
டிப்ளமா மானிடயியல்,
தொல் பொருளாய்வுத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

ஆங்கிலத்தில் 'ஆர்கியாலஜி' (archaeology) என அழைக்கப்படும் இப் பிரிவைத் தமிழில் தொல் பொருளாராய்ச்சி என வழங்கலாம். இது மண்ணுக்கடியில் புதைந்து, மறைந்து கிடைக்கின்ற மனித இனத்தின் பண்டைய நாகரீகச் சின்னங்களை அகழ்ந்தெடுத்து வெளிப்படுத்தும் ஆராய்ச்சியாகும். இந்த ஆங்கிலச் சொல்லை இரண்டாகப் பிரித்துப் பொருள் கூறின் ஆதி காலத்தைப்பற்றி ஆராயும் அல்லது விளக்கும் அறிவியல் என்றாகும் (archaeo - ancient, Logos. - science)

இவ்வுலகில் மனிதன் தோன்றிய அன்றே வரலாறும் தோன்றிற்று. மிகப் பழங்காலத்தைப் பற்றிக் கூறும் இலக்கியங்கள், வரலாற்று ஏடுகள், கல்வெட்டுக்கள், காசுகள் போன்றவை தோன்றுவதற்கு முன்னர் வாழ்ந்த மக்களது வாழ்க்கை,நாகரீகம் பண்பாடு ஆகியவற்றைப்பற்றி அறிய உதவுவது இவ்வியலேயாகும். இவ்வாராய்ச்சியின் முழு நோக்கமும் இதுவே. ஒரு நாட்டின் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட கால நிலையை வெளிப்படுத்தும் திறன் இவ்வாராய்ச்சியாளரிடமே உள்ளது.

அன்றியும் ஒரு நாட்டின் வரலாற்றையும். பண்பாட்டுப் பெருமையையும், பழமையையும் விளக்குதல், விரிவு படுத்துதல், போன்ற திறமைமிக்க சிக்கலான பணிகளையும் இவர்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக. இந்தியப் பண்பாடு, இந்திய வரலாற்றின் தொடக்கம் ஆகியவை கி. மு. ஆயிரமென்றே அரப்பா. மொகஞ்சோதாரோ போன்ற இடங்களில் அகழ்வாராய்வு நடத்தப்படுதற்கு முன்னர்க் கருதப்பட்டது.

ஆனல் மேற் கூறப்பட்ட புதையுண்ட இரு நகரங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட பண்பாட்டுச் சின்னங்கள் இந்திய வரலாற்றின் தொடக்கத்தை கி. மு. 2500-க்கு முன்னேக்கி நகர்த்தி விட்டன. இது தொல் பொருளாராய்ச்சியாளர்களின் அரும் பெரும் சாதனையன்றோ! அது போலவே தமிழ் நாட்டில் சங்கம் நிலவிய மதுரையிலோ சோழ நாட்டின் ஆதித் தலைநகரான

பழையாறையிலோ பெரும் நிலப்பரப்பில் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பெறின் தமிழர் நாகரீகத்தின் பெருமை, பண்பாட்டின் தொன்மை போன்றவை உலகுக்கு மேலும் நன்கு உணர்த்தப் படலாம்.

மனிதன் ஆக்கிய பொருள்களை ஆய்வது. அப்பொருள்களைத் தேடும் முயற்சிகள், ஆராய்ச்சிகள் மட்டுமேயன்றிக் கண்டெடுத்த பொருள்களை ஆய்ந்து மனித வாழ்க்கையில் கடந்தகால நிகழ்ச்சிகள், கட்டங்கள் இவற்றின் தொடர்பு காட்டலும் இவ்வியலில் அடங்கும்.

மனிதன் இவ்வுலகில் தோன்றியது முதல் அவனை நிழலாகத் தொடர்ந்து அவனது வாழ்க்கை வரலாற்றினைத்துருவி ஆராயும் ஒரு இயல் என்றும் இதனைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கலாம்.

கடந்த ஒரு நூற்றுண்டாக இவ்வியல் சீரிய முறையில் வளர்ந்து வந்துள்ளது. பழமையான சின்னங்கள், தங்கம், வெள்ளி, இரத்தினக் கற்கள் போன்றவற்ருல் இயற்றப்பெற்ற அழகிய தொல்பொருள்களைப் பற்றி மட்டுமே ஆய வேண்டுமென்பதில்லை. மிகவும் எளிதாகக் கருதப்படுகின்ற சாம்பல், மண், கற்கள், எலும்புத்துண்டுகள், மண்டை ஓடுகள் போன்றவற்றிருக்கும் இவ்வாராய்ச்சியில் முதன்மை உண்டு. மனித குலத்தின் வரலாற்றுப் பெருமையை ஆராயும்போது அவனுடன் ஆதிகாலம் தொட்டு உறவாடி, உறுதுணையாக இருந்த ஏனைய இயற்கைச் சக்திகளைப் பற்றியும் நாம் தெரிந்துகொள்ள முடிகின்றது. புவியின் அமைப்பு வெட்ப தட்பநிலை, ஆறுகளின் போக்கு, அவற்றில் ஏற்பட்ட மாறுதல்கள், கடல் மட்டத்தின் ஏற்றம், இறக்கம், போன்ற இயற்கைக் கூறுகளைப் பற்றியும் தெரிந்துகொள்ள இவ்வியல் நமக்கு ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது.

எனவே, தொல்பொருளியல் என்பது ஒருவகையில் அறிவியலாகத் திகழ்கின்றது மற்றுமொரு வகையில் ஒரு கலையாகக் காட்சியளிக்கின்றது. தொல்பொருளியல், "வளர்ச்சி பெற்றுவரும் ஒரு அறிவியல்" எனஎங்ஙனம் கருதலாம் என்பதைக்காண்போம்.

பல்லாயிர மாண்டுகளாக மண்ணுக்கடியில் மறைந்து கிடக்கும் பண்பாட்டுச் சின்னங்களைத் தோண்டி எடுப்பதற்குப் புதைபொருளாராய்ச்சியாளர் பலவகையான அறிவியற் கருவிகளையும்,

சோதனைகளையும், கையாள வேண்டியுள்ளது. இப்பணியில் இவர்களுக்கு புவியியல், தரையியல், பௌதிகம், வேதியல், விலங்கியல் தாவரவியல், வானவியல், உடற்கூறு இயல், போன்ற அறிவியல்கள் கைகொடுத்து உதவுகின்றன. விரிவான குறிப்புகளை இது பற்றிப் பின்னர் நாம் காண்போம்.

தொல்பொருளியல் ஒரு கலை என்ற கூற்றுக்குச் சான்றுகள் பல உள்ளன. அகழ்ந்து எடுக்கப்படுகின்ற பொருள்களை வெறும் காட்சிப் பொருட்களாகக் கருதி அவற்றைப் பொருட்களஞ்சியத்தில் வைத்துப் போற்றிப் புரந்தால்மட்டும் போதாது. அவை வெறும் காட்சிப் பொருள்கள் மட்டும் அல்ல. பழங்குடிகளின் ஏற்றமிகு வாழ்க்கை நுணுக்கங்களை, இரகசியங்களைத் தன்னகத்தே அடக்கியுள்ள பண்பாட்டுச் சின்னங்களுமாகும். அவை சுவை பல நிறைந்த கதைகளைச் சொல்லவல்லன. எனவே அவற்றை நன்கு ஆய்ந்து பண்டைய நாகரீகத்தின் மேம்பாட்டினை உலகுக்கு உணர்த்த வேண்டிய பணி. தொல் பொருளாராய்ச்சியாளர்களைச் சாரும். இப்பணியைத் தொடர்வதற்கு நுண்ணறிவு இருந்தால் மட்டும் போதியதன்று. கலை உணர்வு கற்பனைத்திறன், எழுத்துத்திறன் ஆகிய மூன்றும் ஒருங்கிணைய வேண்டும். எனவே தொல் பொருளாய்வாளர் தன்னை ஒரு கவிஞனாக, எழுத்தாளனாகக் கருதிக் கொண்டு இப்பணியில் ஈடுபட வேண்டியுள்ளது. மேலும் இவ்வாராய்ச்சியில் ஒரு கலைக் கண்ணோட்டங் கொண்டும் இணைய வேண்டியுள்ளது.

தொல்பொருளியலும் வரலாறும்.

உலகில் உயர்ந்தெழுந்து மறைந்த பல பேரரசுகள், அரசர்கள், படையெடுப்புகள், அவற்றின் வெற்றி தோல்விகள் ஆகியவைப் பற்றித்தான் வரலாற்றியல் நமக்குத் தெரிவிக்க முடியும். ஏழை எளிய மக்களைப் பற்றிய குறிப்புகளைப் பெரும்பாலும் வரலாறு தெரிவிப்பதில்லை. ஆனால் தொல் பொருளியலோ இப்புவியில் தோன்றி மறைந்த பல தொன்மைமிக்க நாகரீகங்களைப் பற்றியும், அவற்றின் எழுச்சி, வீழ்ச்சி, தொடர்ச்சி, பரவல், ஊடுருவல் போன்ற குறிப்புகளையும் வெளிப்படுத்து தன்மை வாய்ந்தது. ஆதி மனிதனின் அன்றாட வாழ்க்கை, அவனது சமூகத்தில் இயங்கி வந்த அரசியல், பொருளாதாரம், வாணிபம், கட்டிடக்கலை, சமயம், இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறை, உடலைவிட்டுப் பிரிந்த உயிரின் மேல் உள்ள நம்பிக்கை ஆகியவைப்பற்றிய விரிவான குறிப்புகளை இவ்வியல் நமக்கு இயம்பும்.

அகழ்ந்தெடுக்கப்படும் ஆயிரமாயிரம் தொல்பொருள்கள் நமக்குச் சான்றுகளாக மாறி, இக்குறிப்புகளை உணர்த்தவல்லன. ஏனெனில் இப்பொருள்களில் பெரும்பான்மையானவை சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்ந்த மக்களின் புழக்கத்தில் இருந்தவையேயாகும். கல், மண், என்பு போன்ற வற்ருல் ஆக்கப்பட்ட கருவிகள், அணிகள் பாத்திரங்கள், மட்பாண்டங்கள் தெய்வத்திருமேனிகள் ஆகியவை எல்லாம் பொதுமக்களின் உடமையாகும். இன்றும் இந்நிலையே உள்ளது. இவை தவிர அக்கால நகர அமைப்புப் பற்றியும் ஓரளவு அறிந்துகொள்ள இயலும்.

எனவே வரலாற்று ஏடுகளினுல் தொடமுடியாத எட்டிப் பிடிக்க இயலாத காலத்தைத் தொல்பொருளாராய்ச்சிகளினுல் தொட முடியும்! தொடர வைக்கவும் முடியும்! இதுவே இவ்விரண்டு இயல்களுக்கும் உள்ள வேறுபாடு. எனினும் வரலாற்றுக் கால நிகழ்ச்சிகளைப் பற்றித் தெரிந்துகொள்ள, இவ்விரு இயல்களும் ஒன்றுக்கொன்று நெருங்கி உறவாடவேண்டும். அப்போதுதான் ஒரு நாட்டின் பண்பாடு, வரலாறு ஆகியவற்றை முற்றுப்பெற்ற ஒரு நிலையில் மக்களுக்கு உணர்த்த முடியும்.

(வளரும்)

கையறவு

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரால் நடத்தப்பெற்று வருகிற தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய திரு சிவ. குப்புசாமி பிள்ளை அவர்கள் 17—12—70 அன்று இவ்வுலக வாழ்வை நீத்தமை யறிந்துபெரிதும் வருந்துகிறேம். தொடக்கப் பள்ளியாக 1916-இல் தொடங்கி 1922-இல் உயர்தொடக்கப்பள்ளியாக வளர்ந்தது. பிள்ளையவர்கள் 1927இல் ஆசிரியராகச்சேர்ந்து 1941 வரை பணியாற்றினுர்கள். அவர்களின் கண்காணிப்பின் கீழ் எட்டாவது வகுப்பு மாணவர்கள் உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வுக்கானத் தமிழ்ப்பாடங்களைப் பயின்று, தமிழில் நல்ல பயிற்சிபெற்று வந்தனர். இலக்கியத்தொடர்புடைய பல சிறு நாடகங்கள் சிறந்தநடையில் எழுதியுள்ளார்கள். தமிழ்மொழியில் நல்ல புலமை வாய்ந்தவர்கள். அவர்களின் இன்னுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்புற்றிருக்க வேண்டுகிறேம்.

திராவிடமொழிகளில் பழமொழி ஒப்புமை

பேராசிரியர் வ. பெருமாள்,
எம். ஏ., பி. டி., எம். ஆர். ஏ. எசு.,
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி,
உரிகம், கோலார் தங்கவயல்.

தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய நான்கு பண்பட்ட மொழிகளும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பது திராவிட மொழி ஆராய்ச்சியாளர் கண்ட முடிவு. டாக்டர் கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை ஆராய்ந்துள்ளார் என்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது. திராவிட மொழிகள் பேசுவோர் அடுத்தடுத்துள்ள மாநிலங்களில் வாழ்வதாலும் அடைத்தாற் போல் வாழ்வதாலும் நான்கு திராவிட மொழிகளில் உள்ள பழமொழிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவை பொதுவாகவே இருக்கின்றன. பழமொழி ஒப்புமையைச் சொல் ஒற்றுமைப் பழமொழி, கருத்து ஒற்றுமைப் பழமொழி என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். "தமிழுடன் ஏனைய திராவிட மொழிகளைத் தனித்தனியாக-ஒவ்வொன்ருக ஒப்பிட்டு இங்கு ஆராய்வோம். சொல்லொற்றுமைப் பழமொழி யாவது ஒரே கருத்தை கொண்ட பழமொழி (identical Proverbs). கருத்தொற்றுமைப் பழமொழியாவது ஒத்த கருத்தைக்கொண்ட பழமொழி (**Parallel Proverbs**).

தமிழும் மலையாளமும் (ஒரே கருத்துப் பழமொழிகள்) தமிழுக்கும் கன்னடத்திற்கும், தமிழுக்கும் தெலுங்குக்கும் உள்ள மொழித் தொடர்பை விடத் தமிழுக்கும் மளையாளத்திற்கும் மொழித் தொடர்பு மிகுதியாக உண்டு. தமிழிலும் மலையாளத்திலும் ஒத்த சொல்லும் ஒத்த கருத்தும் கொண்ட பழமொழிகள் எண்ணிக்கையில் மிகுதியாக இருப்பது இவ்வுண்மையை நன்கு உறுதிப் படுத்தி மெய்ப்பிக்கின்றது.

'அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை' என்னும் தமிழ்ப் பழமொழி 'அக்கரெ நில்கும்போள் இக்கரெப் பச்சா' என்று மலையாளத்தில் வழங்குகின்றது. தமிழில் 'இல்லை' என்னும் சொல் மலையாளத்தில் 'இல்ல' என்று வழங்குவதை மலையாளப் பழமொழிகளில் பரக்கக் காணலாம்.

'ஆசைக்கு ஓர் அளவில்லை', என்பது தமிழ்ப் பழமொழி. 'ஆசக்கு அதிரில்ல' என்பது மலையாளப் பழமொழி. ஒருவன் குற்றம் செய்தால் அரசியல் சட்டம் அவனை அப்பொழுதே தண்டிக்கும். ஆனால் இறைவனோ குற்றவாளியை அன்றைக்கே தண்டிக்காமல் பொறுத்துக் கொண்டிருந்து இறுதியில் தண்டிப்பான். இப்பழமொழி இரு மொழிகளுக்கும் பொதுவாக இருப்பதைக் காணலாம்.

'அரசன் அன்று கொல்லும்; தெய்வம் நின்று கொல்லும்' (தமிழ்)
'ராசா வன்னறுக்கும்; தெய்வம் நின்னறுக்கும்' (மலையாளம்)

தாய் எவ்வளவுதான் தன் குழந்தையிடம் பாசம் வைத்திருந்தாலும் குழந்தை அழுதால் தான் பால் கொடுக்க வேண்டும் என்னும் எண்ணம் தாய்க்கு ஏற்படும். பால் நினைந்து ஊட்டும் தாயார் மிகக் குறைவு. இவ்வுண்மையை 'அழுத பிள்ளை பால் குடிக்கும்' என்னும் பழமொழி உணர்த்துகின்றது. இதே பழமொழி மலையாளத்தில் 'கரயுந்ந குட்டிக்கே பாலுள்ளூ' என்று வழங்குகின்றது.

எதற்கும் ஓர் அளவுண்டு. ஒரு பொருள் எவ்வளவுதான் நன்மை பயத்தாலும் அதை அளவு கடந்து பயன்படுத்தினால் தீமையே விளையும். இக்கருத்துள்ள 'அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு' என்னும் பழமொழி நாம் எல்லோரும் நன்கு அறிந்ததே. இதே பழமொழி மலையாளத்தில் 'அதிக மாயால் அம்ருதும் விஷம்' என்று காட்சியளிக்கின்றது. பரம்பரைப் பணக்காரர், புதுப் பணக்காரர் எனப் பணக்காரர்களை இரு வகையாகப் பிரிக்கலாம் புதுப்பணக்காரர் அல்லது திடீர்ப் பணக்காரர் புதிதாகப் பெருஞ்செல்வம் பெற்றவுடன் எவ்வாறு நடந்து கொள்வது என்பது தெரியாது. அதிலும் புதுப்பணக்காரன் அற்பனாக இருந்துவிட்டால் அவனுக்குத் தலைகால் புரியாது. புதுப்பணக்காரனாகிய அற்பன் வெயிலோ மழையோ இல்லாத நடு இரவில்-குளிர்ச்சியான முழுநிலா தன்பால்கதிரைப் பரப்பும் இரவில் நடந்து செல்லும்போது கூடத் தன்னிடம் குடையிருக்கின்றது என்பதைப் பிறர்க்குக் காட்டவேண்டும் என்னும் பகட்டுக்காகக் குடை பிடித்துச் செல்வான். அவன் செயல் 'அற்பனுக்குப் பணம் கிடைத்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பான்' என்னும் தமிழ்ப் பழமொழியை உண்டாக்கிற்று இதுவே, 'அல்ப்பனு அர்த்தம் கிட்டியால் அர்த்த ராத்ரிக்கும் குட பிடிக்கும், என்று மலையாளத்தில் வழங்குகின்றது.

உண்ட வீட்டுக்கு இரண்டகம் நினைப்பது நம் பண்பன்று. அது மன்னிக்கமுடியாத மாபெரும் பாவமாகும். 'செய்ந்நன்றி கொன்றோர்க்கு உய்தி இல்லை' என்பது நம் அறம். அதை உணர்த்தத் தோன்றிய பழமொழி 'அன்னமிட்ட வீட்டில் கன்னமிடுவதா.' இப்பழமொழி மலையாளத்தில் 'அன்னம் இட்டிடத்து கன்னம் வய்க்கருது' என்று விளங்குகின்றது. சாதாரண காலத்தில் பாவமாகக் கருதப்படுவது ஆபத்துக் காலத்தில் பாவமாகக் கருதப்படுவதில்லை. 'ஆபத்துக்குப் பாவம் இல்லை' என்னும் தமிழ்ப் பழமொழியும் 'ஆபத்தில் பாபமில்ல' என்னும் மலையாளப் பழமொழியும் இவ்வுண்மையை உணர்த்துவதைக் காணலாம். 'ஆயிரம் கல நெல்லுக்கு ஓர் அந்துப் பூச்சி போதும்' அதுபோல் 'ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்.' இத் தமிழ்ப் பழமொழி, 'ஆயிரம் காக்கக்கு ஒரு கல்லு' என்று மலையாளத்தில் வழங்குகின்றது.

சூடான உணவே சுவையான உணவு என்பது நம் நாக்கு உணர்ந்த உணவியில் உண்மை. சூடற்ற உணவு சுவையற்ற உணவு. இவ்வனுபவ உண்மையை 'ஆறின கஞ்சி பழங்கஞ்சி' என்று தமிழ்ப் பழமொழியும் 'ஆறிய கஞ்ஞி பழம் கஞ்ஞி' என்னும் மலையாளப் பழமொழியும் உணர்த்துவதைக் காணலாம். மனிதன் இறந்துவிட்டால் அவன் பிணத்தை ஒரு காசுக்குக் கூட விற்க இயலாது. மனிதன் உயிருடன் இருந்தால் தான் பயன் உண்டு. இறந்தால் பயனில்லை ஆனால் பறவைகளும் விலங்குகளும் அவ்வாறு அல்ல. மயில் செத்துவிட்டால் அதன் தோகை பயன் படும். புலி இறந்தால் அதன் தோல் பயன்படும். யானையைப் பற்றிக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. 'யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பது நாடறிந்த தமிழ்ப் பழமொழி. 'ஆன இருந்நாலும் ஆயிரம், செரிஞ்ஞாலும் ஆயிரம்' என்பது மலையாளப் பழமொழி. இப் பகுதியில் தமிழுக்கும் மலையாளத்துக்குமுள்ள ஒரே கருத்துள்ள பழமொழிகளை ஓரளவு கண்டோம்.

தமிழும் கன்னடமும்

தமிழ், கன்னடம் ஆகிய இரு மொழிகளுக்கு மிடையே சொல்லொற்றுமை கொண்ட ஒரே கருத்துள்ள பழமொழிகள் சிலவற்றை இவண் காண்போம்.

உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்பது உலகறிந்த உண்மை. இப்பேருண்மை 'ஐந்து விரலும் ஒன்று போல் இருக்குமா?' என்று பழமொழி.

யாகத் தமிழில் வழங்குகின்றது இதே கருத்துள்ள பழமொழி கன்னடத்தில் 'ஐது பெரளு ஒந்தெ சமனுயிருத்தயே' என்று வழங்குகின்றது ஒருவன் தன் குழந்தைகளிடத்தில் ஒரே அள வில் அன்பு செலுத்தல் வேண்டும். ஒரு குழந்தையை விருப் பத்துடனும் மற்றொரு குழந்தையை வெறுப்புடனும் நடத்துதல் கூடாது. அவ்வாறு ஒருவன் நடந்தால் அவனைக் கண்டித்துத் திருத்த நாம் பயன்படுத்துகின்ற தமிழ்ப் பழமொழி 'ஒரு கண் ணில் வெண்ணெய்; மறு கண்ணில் சுண்ணும்பா?' இப்பழ மொழி கன்னடத்தில்' ஒந்து கண்ணிகெ பெண்ணெ; மத் தொந்து கண்ணிகெ சுண்ண' என்று அமைந்திருக்கின்றது.

வரலாறு எழுத உண்மை, அடிப்படை, சான்று முதலியவை தேவை. ஆனால் கதைக்கு அவை தேவையில்லை. கதை எவரும் சொல்லலாம்; எப்படியும் சொல்லலாம். இவ்வுண்மையைக் 'கதைக்குக் காலும் இல்லை, தலையும் இல்லை' என்னும் தமிழ்ப் பழமொழி உரைக்கின்றது. 'கதெகெ காலூ இல்ல, தலெயூ இல்ல' என்பது இதே கருத்தை உரைக்கின்ற கன்னடப் பழ மொழி. 'கரும்பு தின்னக் கூலியா?' என்பது தமிழ்ப் பழமொழி. இம்முதுமொழி 'கப்பு தின்னலு கூலியோ' என்று கன்னடத்தில் இருக்கின்றது. மடையனுக்கும் ஈனனுக்கும் உயர்ந்த கருத்தை எவ்வளவுதான் இனிமையாகச் சொன்னாலும் அவர்களுக்கு விளங் காது. விளங்க வைக்கவும் முடியாது. இவ்வுண்மையைக். 'கழுதைக்குத் தெரியுமா கஸ்தூரி வாசனை' என்னும் தமிழ்ப் பழ மொழி கூறுகின்றது இதே பழமொழி கன்னடத்திலும் உண்டு இதோ அப்பழமொழி, 'கத்தெ பல்லுதே கஸ்தூரி பரிமள. கள்ளனைவிடக் குள்ளனே பொல்லாதவன் என்னும் எண்ணம் இந்நாட்டு மக்களின் மனத்தில் வேரூன்றிவிட்டது அதன் விளைவாகத் தோன்றியவையே கீழ்க்கண்ட பழமொழிகள்:—

'கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பலாகாது' (தமிழ்)
'கள்ளன நம்பிதரூ குள்ளன நம்ப பேட' (கன்னடம்)

ஒரு தாய் தன் குழந்தை எவ்வளவுதான் கருப்பாகவும், பார்ப் பதற்கு அருவருப்பாகவும் இருந்தாலும் அக்குழந்தையின் மேலுள்ள பாசத்தால் அதை வெறுத்து ஒதுக்கமாட்டாள். நேர்மாறாக அக்குழந்தையைக் கண்ணேபோல் - பொன்னேபோல் போற்றிச் செல்லமாகக் கொஞ்சி மகிழ்வாள். தாய்ப் பாசத் திலிருந்து தோன்றிய அனுபவமொழி பழமொழியாகி விட்டது. 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பதே அத்தமிழ்ப் பழமொழி இது கன்னடத்தில் 'காகெகூ தன்னமரி ஹொன்ன

மரி' என்று வழங்குகின்றது இந்நாட்டிலுள்ள இந்து சமயத்தார் தொன்று தொட்டு காசியைத் தலைசிறந்த திருத்தலமாக. புண்ணியத்தலமாகக் கருதி வருகின்றார்கள். இந்து சமயத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ளவர்கள் தம் தீவினையைப் (பழவினையை) போக்கக் காசிக்குச் செல்வதுண்டு. சிலர் புரியும் தீவினை மிகுதியாக இருப்பதும் அத்தீவினையை எங்குச் சென்றாலும் போகக இயலாதிருப்பதும் நாம் அறிந்த உண்மையே. அதை உணர்த்த எழுந்த தமிழ்ப் பழமொழி. 'காசிக்குப் போனாலும் கருமம் தொலையாது.' கன்னடத்தில் இதே பழமொழி 'காசிகெ ஹோதரு கர்ம தொலகவில்ல' என்று விளங்குகின்றது.

இன்பத்தில் இருவகையுண்டு. ஒன்று சிற்றின்பம்; மற்றொன்று பேரின்பம். சிற்றின்பத்திற்குக் காரணமாயிருப்பது காமம். பகுத்தறிவுக்குக் கட்டுப்படாமல் செல்லும் இயல்புடையது காமம். 'காமத்துக்குக் கண் இல்லை' என்பது தமிழ்ப்பழமொழி. கன்னடத்தில் இப்பழமொழி 'காமக்கெ கண்ணில்ல' என்று அமைந்திருக்கின்றது.

தமிழுக்கும் கன்னடத்திற்குமுள்ள பழமொழி ஒற்றுமையை ஒருவாறு இப்பகுதியில் கண்டோம். கன்னடப் பழமொழிகளைத் தொகுத்து ஆய்ந்தவர் டாக்டர் கிட்டல் பாதிரியார் (Dr. Rev. Kittel) என்னும் அறிஞர் என்பது குறிப்பிடத்தக்கது. நாடு முழுவதும் பரவியுள்ள கன்னடப் பழமொழிகளை முதன் முதலில் தொகுத்து வெளியிட்ட தனிப் பெருமை டாக்டர் கிட்டல் பாதிரியாரைச் சேரும். 1894-ஆம் ஆண்டில் அவர் தொகுத்து வெளியிட்ட கன்னட ஆங்கிலப் பேரகராதியில் 4000-க்கும் மேற்பட்ட கன்னடப் பழமொழிகள் இருக்கின்றன. இவற்றுள் சில துளுமொழியைச் சேர்ந்தவை. இப்பேரகராதியின் வெளியீட்டாளர்கள் 1912-ஆம் ஆண்டில் கன்னட ஆங்கில ஒத்த பழமொழித் தொகுப்பை வெளியிட்டனர். திரு. சி. அயவதனராவ் அவர்களால் பதிப்பிக்கப் பெற்ற மைசூர் அரசு ஏட்டில் (Mysore Gazetter) ' உழவுப் பழமொழிகள் : சாதிப் பழமொழிகள் என்று இவ்வாறு கன்னடப் பழமொழிகள் பாகுபடுத்தப்பட்டுள்ளன. கன்னடப் பழமொழி ஆராய்ச்சி நூலை திரு. குல்கர்ணி, பிரகலாத் முதன் முதலாக 1936-ம் ஆண்டில் வெளியிட்டார் இதுவரை கன்னடப் பழமொழித் தொகுப்புக்கள் பல வெளி வந்திருக்கின்றன. கன்னடத்தில் 18,000 பழமொழிகள் உள்ளன என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

(தொடரும்)

நெடு நல்வாடை

திரு. K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.

அகம் புறம் என்ற பகுப்பின் நால்வகை உறுதிப்பொருள்களை உணர்த்தும் பெற்றிமையுடைய பத்துப்பாட்டின் கண் ஏழாவது பாட்டாக நெடு நல்வாடை அமைந்துள்ளது. நூற்று எண்பத்து எட்டு அடிகள் கொண்ட இப்பாட்டு அறத்தொடர்புடைய அகமும் புறமும் மின்வலிகொண்டு அளவுதல் காரணமாக விளக்கமுற்று முழுமையுறும் வாழ்வினை எடுத்துரைக்கும் வனப்புடையது: நெடுநெறியும், கலைத்திறனும், பா நலங்களின் பல சிறப்பும் அமையப் பெற்ற எழில் நலமுடையது: விழுமிய உணர்ச்சி யோடியைந்த உயரியகற்பனை யனுபவ நிறைநலத்தது. இதனுனே இதனை, மருவோடியைந்த வாடையாகவும், இனிய வாடையாகவும் கோல வாடையாகவும். நெடிய வாடையாகவும் நல்ல வாடையாகவும், மற்றும் மன்பதைக்குரிய பல்வேறு வாடையாகவும் வீசுதலைக்குறித்து, 'மருவினிய கோலநெடு நல்வாடை' யெனப் பழைய வெண்பா பகரும்.

'நெடு—நல்—வாடை' எனும் எளிய பெயர், வடக்குத் திக்கினின்று வரும் வாடைக் காற்றின் இயக்கத்தைக் கொண்டு நானிலத்து மக்கள் மனத்தின் பெற்றியினைத் தேற்றித் தெளிவிக்குமாறு இட்டபெயர். பொதுவாக மக்களுக்கு வாடை, நாழிப்போதினையும் ஒருழிப் போதாக நீண்டு தோன்றச் செய்வது: துன்பமும் துயரும் தருவது: நடுக்கமும் செய்யும் கொடுமையுடையது. மக்கள் வெறுப்பதாய வாடை, நீள் உலகில் உவப்பதாய நல்ல வாடையென விதந்தோதினர் ஆசிரியர் நக்கீரனார். இப்பாட்டினில், வாடை கடவுட் பொருளாகிக் கொண்டே நீளத் தொடர்ந்தொழுகும் ஆற்றலுடையதென, அவர் உரைத்துச் செல்லுதல் இங்கு நினைவு கூர்தற்பாலது. முதற்கண் நெடு நல்வாடையின் பெயர் பொருத்தத்தின் நலம் கூர்ந்து கவனித்தற்குரியது. மிகப் பல அடிகளையுடைய இப்பாட்டு, கொண்டு கூட்டுடையதாய் மேற் போக்காகக் கற்பார் மனத்தை வாடைபோல் துன்புறுத்தும் பண்புடையதாயினும், வாடையின் வழி, இப்பாட்டு எழிலும் இனிமையுங் கருவுற்று வளனும் பயந்து நலனும் சுரந்து நிலைபெற்றிருத்தலைக் கண்டு களிக்கற்பாற்று.

வாடை வருத்த, போர்மேற் சென்ற தலைவனது பிரிவுத் துயரால் வருந்தும் தலைவியின் நினைவுத் துயர்தீர்ந்து.

நீர் மருங்கிருக்கும் கொடி போன்று நெஞ்சந் தழைப்ப, அவளது செவிலித்தாயர் தலைவனது பாசறைத் தொழில் விறலுடன் இன்னே முடிவதாக, எல்லா நிலங்கட்கும் பொதுத் தெய்வமாகிய கொற்றவைக்கு வழிபாடியற்றியதை விதந்தெடுத்துக் கிளத்தல் இப்பாட்டின் நல் நோக்கமாகும். இப்பாட்டின்கண், மனம்பற்றும் புறப்பொருளியற்கை எழில் நலங்களை நானில வளங்களாகப் பகுத்துக்கொண்டு, ஆசிரியர் நக்கீரர், கூதிர் காலத்தில் அவற்றின் இயல்பு தோன்ற பருப்பொருள்களின் சிறிய கூறுகளையும் இம்மியும் விடாது நிரலே சிறப்பித்து விரிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளார். மற்றும், புறத்தறிவின் வழி அகத்தினிமை உணர்வு பெருக, அகத்திணைப் பகுதிக்குரிய பிரிவாற்றுது இல்லிருத்தலாகிய உரிப்பொருளைச் சுருக்கமாகவும் நுண்ணியதாகவும் தலைவியின் சீலத்தினைக்கொண்டு உருக்க முதிர விளக்கியுள்ளார். பின்னர் அவளது தனிமைத் துயர் துடைக்க செவிலியர் தலைவனது கடியவரவு நோக்கி பாசறைத் தொழில் ‘இன்னே முடிக’ என இறை வழிபாடியற்றுதலைக் கூறியுள்ளார். அதன் பின்பு, நம்மனம் நன்னிலை எய்யுமாறு, இறையடி நினைத்தலுடன் காட்சி முதலிய நல்வகைத் துறைகளிலும். அன்புடைமை, அருளுடைமை கொண்டொழுகும் பயிற்சிகளில், மனம் படியுமாறு செய்ய, மீண்டும், நக்கீரர், நடை நலனேடு நம்மைப் புறத்தே தலைவனது பாசறைக்கு அழைத்துச் சென்று, இறைவனடி நினைத்தலின் கூறுபாடுகளாக அமையும் அவனது பாசறைத் தொழிலுக்குரிய மாண்புகள நல்லனவாகவும் இன்பமாகவும் விளங்கும் வகையினைக் காட்டி, இப்பாட்டினில் வாடைத் துன்பம் பாழ்பட்டு இறையின்பம் தோன்ற, நெடு நல்வாடைப் பாட்டினை பொருட் செறிவோடு இனிது முடித்துள்ளார்.

தலைவன் தலைவியருடைய அன்பு பற்றிய திணையொழுகலாற்றினையைச் சுவையுற யுணர. புலமைக் கலை நலத்தால் வாடையைத் துணை கொண்டு, ஆசிரியர் நக்கீரர், துன்பமுற்றவர்க்கல்லாது இன்பமில்லையென்பதைத் துன்பத்தின் தூய்மை வாயிலாக, அதன் இயலழகை. இனிமை பயக்கத் தோன்றச் செய்துள்ளார். வாகை வேண்டி போர் மேற்சென்ற அரசனைப் பிரிந்த அரசியார், பிரிவுத் துயர்மிக, வாடையால் வருந்தி நெடிது ஆற்றுமை மேலிட்டிருக்கும் நிலையை ‘நெடு’ எனும் சொல்லால் முதற்கண் உணர்த்திப் பின், வாடையின் துன்பத்திற்குக் கலங்காதும், போரின் துயரத்திற்கும் வாடாதும், கடமையுணர்ச்சி மீதூர, தன் வினையின கண்ணுங் கருத்துமாய் வீர

வுணர்வோடு ஆற்றும் அரசனுக்கு நல்லதாக வாடை அமைந்திருந்த நிலையை 'நல்' எனும் அடை மொழியால் விளங்க வைத்து, உலகையும் உலகத் துயிர்களையும் நல்லவையாக்கும் வாடையினையும் பாடல் பெறும் பொருளாக வளம்படுத்தியுள்ளார். நீக்கமற இறை கலந்துள்ள இயற்கை, அறிவூட்டும் ஆற்றலுடைய தென்பதை யுணர்த்த நக்கீரர், வாடையும் ஓர் நூலென வற்புறுத்தி, வாடை வீசும் மொழியில், ஓர் ஓசையின்பம் உயிரைத் தழுவி, மனக்கவலைகளை மாற்றி உண்மை ஒளியால், உள்ளம் பூரித்து உயரும் நிலையினை விளங்க வைத்தார். பாட்டினைப் படிக்கும்போது நம்மை யறியாமலே நாம் பெருமிதவுணர்வு கொள்ள, இப்பா, பீடு நடை கொண்டு நடை நயமும் தொடை நயமும் பொருணலத்தோடு பொருந்திச்செல்வதை நன்கு உணரலாகும். பாட்டின் அடிகளில், ஓட்டமும் ஓசையும் நுகரும்போது, எல்லாவற்றையுங் கடந்து தனித்து நிற்கும் கடவுளியலையும், எல்லாவற்றிலும் உடன் கலநது நிற்கும் கடவுள் நிலையினையும் நுண்மையாகவும் குறிப்பாகவும் பொலிந்து திகழ வைத்தது உணர்ந்து கொள்ளப்படும். வாழ்க்கைக் கூறு, இப்பாட்டில் அகமும் புறமுமாய் விரிந்து காதலும் வீரமுமாய் அமைந்து கிடக்கும் நயமுணர்ந்து சுவைத்தின்புறும் நோக்கமே இலக்கியத்தின் பயனென்க. பாசறையின்கண் அரசன், அறிவுநெறியில் வினையாற்றலையும் அரண்மனையின்கண் அரசியார் காதலன்பு நெறியில் நிற்பதனையும், கீரர், இறைமை வளர்த்தற்குரிய வாழ்க்கை நெறிகளென விளங்கவைத்து, தலைவன் வீரத்தில் அன்பையும், தலைவி அன்பில் வீரத்தையும் நிலைப்படுத்தியுள்ளார். சிறந்த கருத்துக்களையும் குறிக்கோள்களையும் கொண்டிலங்கும் நெடு நல்வாடை வாழ்க்கைக்கு உரியதாகி வாழ்க்கைக்காகவே வாழ்கிறதென்பது அறியப்படும். எனவே வாடையின் நன்மையையும் இனிமையையும் நக்கீரர் தம் இதயத்தில் நிறுத்திப் போற்றி, உள்ளத் துணர்வால் பாட்டின் உயிர் நிலையினை அறியும் பண்பாடு நம் மனத்திற் நிலைக்க 'நெடு நல் வாடை, யினை இசைத்தார் என்பது போதரும்.

நெடு நல்வாடையின் கண் காணும் சொற்றெளிவும் பல நோக்கும் மெய்யுணர்வின் பயனை அளிக்கும் போக்கினைக் கொண்டு கடவுட்டன்மையினை வலியுறுத்தும் பான்மையது சிந்திக்கின், ஆண்டு தோறும் ஏற்படும் கோடை, வாடைச்சாரல், பனி, மழை முதலிய பருவங்கள் முறை தவறாது ஞாலத்தில் நடைபெறற்கு ஒருண்மைத்தத்துவம இருத்தல் வேண்டுமென்பது அறியப்படும். ஞாயிறும், திங்களும், ஒளிமுதலிய எண்ணிறந்த

தத்துவங்களை ஞாலத்து உயிர்களுக்கு அளித்து, என்றும் சுழன்றுகொண்டே ஓர் கணக்கிற்குட்பட்டு வருங்கால், ஞாலம் ஞாயிற்றையும் திங்களையும் நெருங்குகிற அளவிற்கேற்ப, அவை களின் ஆற்றல்களிலிருந்து ஞாலம்பெறும் அளவுகள் பல்வகை நுண்ணிய வேறுபாடுடையனவாய் விளங்குவது கண்கூடு. மற் றும் கணக்கிற்கெட்டாத உருளைக்கோளங்கள் பலவும் விண்ணில் சுழன்றுகொண்டுமிருக்கின்றன. இவைகளை ஒட்டியும் பருவங் கள் ஏற்பட்டு நடந்து வருவதும், அப்பருவங்களால் உயிரினங் கள் தழைத்து வருவதையும், நன்குணர்ந்த பண்டைத் தமிழர்• பருவங்களை இளவேனில், முதுவேனில் கார், கூதிர், முன்பனி, பின்பனி என அறுவகையாக்கினர். இப்பருவக்கூறுகளில் இதயம் தோயுந்தோறும் எல்லாம்வல்ல கடவுட்டன்மைக்குமுதன்மைதரும் உறுதி உண்டாதல் இயல்பு, இவ்வாறு உறுதி உண்டாகவே, அறிவு இச்சை செயல்முதலியவைகளுக்கு அப்பாற்பட்ட உண்மை நிலை எவ்வண்ணமோ தெய்வப் பற்றுடையாரை ஆட்கொண்டு அருள் புரிவது உற்றுநோக்கலுறுவார்க்குப் புலனாகும். உண்மைத் தத்துவம் அன்னார்க்கு விளங்கவே, விளங்கியதை நீடுநிலைத்து நிற்குமாறு, அன்னவர். 'யான்' 'எனது' எனும் நிலைகெட்டு இறைபால் கலக்கும் காலத்தை எதிர்பார்த்து இறையருளை

'மேலை வானவரும் அறியாததோர்
கோலமே ★ ★
ஞாலமே விசும்பே இவை வந்து போம்
காலமே உனை என்று கொல் காண்பதே'

என இடையறுது வேண்டி நிற்பர். இத்தகைய உண்மைத் தத்துவத்தை தெளிந்து விழுப்ப மெய்தும் தகுதிவாய்ந்த நல லிசைப் புலவர் பெருமக்கள் பாட்டிசைக்கும் காலத்தும் கடவுட் டன்மையினை விண்ணும் மண்ணுமாகிய உலக இயற்கையிலும், பேருயிரியற்கையிலும், சிற்றுயிரியற்கையிலும் வாழ்க்கையிலும் வியக்கத்தக்க வகையில் விளங்க வைப்பர். மற்றும் தெய்வப் புலமையின் ஞானப் பெற்றிபால் இம்மை வாழ்க்கையின் செம்மை நெறியினையும் மறுமை வாழ்க்கைக்குரிய மாசறு நெறியினையும் மக்களை மாண்புறுத்தும் நிலையில் தெளியச் செய் வார். திருமுருகாற்றுப் படையினைப் பாடிய தெய்வத் தொல்லா சிரியராய புகழ்மிக்க நக்கீரர் வாடையினை நோக்கிப் பாட்டி சைத்தும் ஆண்டுங் கடவுட்டன்மையினையே சிறக்க வைத்தார், இப்பாட்டினது சொல்லிலும் பொருளிலும் கலந்த ஒருமையில் ஒன்றித்திளைக்கும் மனம், உலகக் கட்டுவிகுத்து இறைமை பெற்று ஒளிரல் மெய்ம்மை. வாடைவழி இயற்கையின் உள்ளுறையான

இறை விளக்கத்தை நக்கீரர் தம் விழுமிய புலமையால் புலனாக வைத்து அதற்குரிய முறையைத் தெள்ளறிவினால் செவ்வனே பாட்டின்கண் கோலியுள்ளார்.

தொல்காப்பிய நூலின் மெய்ம்மொழிப்படி, சிறைபடா வாடையினை விளக்கும் இப்பாட்டு முதல் கரு உரிப்பொருள் களென்றும் அகமும் புறமுமாய் இயற்கைமுறையில் விழுமியதாக பொருளிலக்கண அமைதியுடன் யாக்கப்பட்டுள்ளது. முதற் பொருளின் விளக்கங்களாகிய காடாயநிலமும், காரும் மாலையு மாயபொழுதும், இவை காரணமாகக் கருக்கொண்டெழும் கருப் பொருள்வகைகளாய மக்கள், விலங்கு பறவை, கறவை, மரம், பூ. உணவு, யாழ் முதலாயவற்றின் சிறப்பியல்புகளும், இவ்விரு வகைப்பொருள்களுக்கும் சுவையூட்டும் திறனாக, உரிப்பொரு ளென்னும் அகப்பொருட் பகுதியின் இனிமை நலமும் உயிர்ப் புடை எழிலுடன் அருமையும் முறைமையும் விளங்க இதன்கண் நுவலப்பட்டிருத்தல் காண்க இப்பாட்டின்கண் வந்துள்ள திணை துறையினைப்பற்றி பொருளிலக்கணவல்லார், நோக்கின் அவை, வாடைபோல் வழங்கும் கிளர்ச்சியும் குழப்பமும் திகைப் பும் மிகப்பெரிதாகக் கொண்டுள்ளதெனக் கண்டுணர்வார்.

பல் காப்பியத்திற்கும் அந்தண்மை உரை கண்ட புகழுடைய ராய நச்சினார்க்கினியர், இப்பாடலின் முன்னுரையில் 'இப்பாட்டுச் சுட்டி ஒருவர்ப் பெயர் கொள்ளாமையின் அகப் பொருளாமேனும் 'வேம்புதலை யாத்தநோன்காழெஃகம்' (176) என அடையாளப்பூ கூறினமையின் அகமாகாதாயிற்று, என்றும், இப்பாட்டினுள் 'கூதிர் நின்றன்றாற்போதே' (72) எனவும் 'கூதிர்ப்பானாள்' (12) எனவும் கூறுகின்றாராதலின் இது 'வாகைதானே பாலை யது புறனே' (தொல்பொருள் புறத்திணை 18) என பாலைக்குப் புறனாகக் கூறிய வாகைத்திணையாய் அதனுள் 'கூதிர்வேனி லென்றிருபாசறைக் காதலினொன்றிக் கண்ணியமரபினும்' (தொல் பொருள் புறத்திணை 21) எனக்கூறிய கூதிர்பாசறையேயாயிற்று, எனத் துறையும் கூறியுள்ளார். இவரே, இப்பாட்டின் முடி வுரையில் 'இப்பாட்டு தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மண்ணாகையாற் சென்று பொருதலின் இப் போர் வஞ்சியாகலின், வஞ்சிக்கு கொற்றவைநிலை உண்மை யின், கொற்றவையை வெற்றிப்பொருட்டு பரவுதல் கூறினார். அதுபாலைத் திணைக்கு ஏற்றலின்' எனக்கூறியுள்ளார். நக்கீரரது கருத்தறிந்து உரைமலர்த்தும் நச்சினார்க்கினியரையும் இவ் வாடைப்பாட்டு மயங்கச்செய்ததினான் அவர் சொற்றொடரைத்

துண்டித்துத் திணையிலும் துறையிலும் துணிவுபெறுது அவற்றைப்பற்றிய முடிபினைத் தேற்றிக்கூறினாரில்லை. நச்சினார்க்கினியர் தம்உரையில் மொழிபுணரியலும், மாட்டும் ஒன்றென மயங்கினர் என உரைவள ஆராய்ச்சியில்வல்லுனர் உரைப்பர்.

'நிரனிறை சுண்ணம் அடிமறிமொழிமாற்
றவை நான் கென்பமொழி புணரியல்பே'

என்பது தொல்காப்பிய எச்சவியல் (8). மாட்டிலக்கணம் என்பது என்னையெனின், அது

'அகன்று பொருள்கிடப்பினும் அணுகிய நிலையினும்
இயன்று பொருண்முடித்தந்தனர் உணர்த்தல்

எனத்தொல்காப்பியச்செய்யுளியல் (211) கூறும். 'மாட்டுஎன்பது பல்வேறு பொருட்பரப்பிற்றுயினும் அன்றுயினும் நின்றதனோடு வந்ததனை ஒருதொடர் கொளீஇ முடித்துக்கொள்ளச்செய்தல்' என்பது பேராசிரியருரையாகும். பாட்டின் முதற்பொருளை சிறப்பித்துக்கொண்டு அதனில் அமைந்துகிடந்தே அகன்று நிற்கும் சார்புப் பொருள்களையெல்லாம் அணுகிய நிலையில் கொணர்ந்து உரைப்பச்செய்யும் நெறியே, மாட்டு எனும் உறுப்பு என்று செய்யுள் வழக்கின் தொல்லாசிரியர் சொல்லுவார். பாட்டின் பல அடிகளிலுமுள்ள சொற்களைச் சேர்த்துத் தொடராக்கிப் பொருள் கொள்ளுதலும், அகன்ற பொருள்களைச் சேர்த்துப் பொருளறிதலும் வேறு வேறுயினமை காண்க. நச்சினார்க்கினியர் தம்முரையிற் காட்டுவது மொழி புணரியல்பு; மாட்டிலக்கணம் ஆகாது. மாட்டுதல் கொளுத்துதல், சேர்த்தல், புணர்த்தல் என்பன ஒரு பொருளன தொல்காப்பியர் மாட்டிலக்கணத்தைச் சொல்லதிகார எச்சயியலில் மொழி புணரியலோடு கூறுமல் செய்யுளியலிற் வழங்கியது கூர்ந்து நோக்கற்பாலது. நெடு நல் வாடைக் குளிர்ச்சியில் வாழ்க்கைப் பாதையினை செம்மைப் படுத்தும் பொருளுணர்ச்சியுடைய சொற்களின் தன்மையினை நச்சினார்க்கினியர் உரையாக்கத்திற்காக நோக்கினரல்லர். வாடை வாயிலாக மக்கள், வாழ்வைக் காத்துக் கொள்வதே போல், சொல்லிற்கீரர், எழுத்தும் ஒலியும் ஒத்த உரிமையோடு வாழ, சொற்களைக் குறுகவிடாது காத்து, பேசுந்தமிழ் மொழியை வளர்த்துள்ள புலமை நெறி வெகு அருமையுடைத்து. இப்புலமை நெறியால், வாடைத் தத்துவத்தின் வரம்பிலாத் தன்மையினையும் விளங்கச் செய்யும் வாய்ப்பு நல்லிசைப் புலமையுடைய நக்கீரருக்கு உளதாயிற்று.

[தொடரும்]